தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 23 மார்ச் 2023 கனி 4




ஆசிரியர்
B. அர்ஜுனன்


கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

MONTHLY
THE WORD OF CHRIST

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39



பாடம் : 39
தலைப்பு : வாக்குவாதம் – Strife
வேத வாசிப்பு : மத்.12:17-30

1. வாக்குவாதம் செய்யமாட்டார் - மத்.12:19
2. ஈசாக்கு மற்றும் கேராரூர் மேய்ப்பர் - ஆதி.26:20
3. பவுலோடு சில ஞானிகள் - அப்.17:18




மாத இதழுக்கான
சந்தா செலுத்த இரு வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

Contact Us: 94435 58041



## FORM IV

| | |
|---|---|
| 1. Place of Publication | : Batlagundu. |
| 2. Periodicity of its Publication | : Monthly. |
| 3. Printer`s Name | : R.Sathiyamoorthi. |
| 4. Address | : 14/13/24 Melamanthai St., Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 5. Whether citizen of India | : Yes. |
| 6. Publisher`s Name | : B.Arjunan. |
| 7. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 8. Editor`s Name | : B.Arjunan. |
| 9. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date:28.02.2023 Signature of Publisher.


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 23 மார்ச் – 2023 கனி – 4


ஆசிரியருரை

## ஆத்துமா ஈடேற நாம் செய்யவேண்டியதென்ன?
## *What Should We Do To the Saving of Soul?*



**ந**ம்முடைய ஆத்துமா விலையேறப்பெற்றது. இந்த ஆத்துமா அழிவில்லாதது. இது ஈடேற வேண்டுமானால் அதற்கான ஆலோசனையை கொடுக்கும் வேதாகமத்தின் வசனங்களுக்கு நாம் முதலாவது செவிகொடுக்கவேண்டும். எபிரெய ஆசான் சொல்லும்போது; "மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்" என்கிறார் (எபி.10:35). ஆத்துமாக்களில் அநேகர் சோர்ந்துபோய் யோனாவைப்போல போதும் கர்த்தவே நான் இருக்கிறதைப் பார்க்கிலும் சாவதே மேல் என்று சொல்லிவிடுகிறார்கள். கர்த்தர் சகலத்தையும் அறிகிறார்.

நாம் எந்த ஒரு விஷயத்திலும் சோர்ந்துபோகாதிருக்க வேண்டும். நமக்கு இருக்கிறதான பெலத்தோடு போராடவேண்டியவர்களாக இருக்கிறோம். வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏழு சபைகளுக்கு கர்த்தர் திருவுளம்பற்றும்போது; அதில் "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" என்று சொல்லுகிறார் (வெளி.3:8). ஒவ்வொரு சபைகளிலும் ஒவ்வொரு குறைகளை சுட்டிக்காட்டிக்கொண்டு வரும் கர்த்தர் இங்கே இந்த சபையை ஒரு விஷயத்தில் பாராட்டுகிறதை நாம் காண்கிறோம். உனக்கு கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல் என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் என்கிறார். இந்த சபையானது தனக்கு இருக்கிறதான கொஞ்ச பெலத்தோடே நிலைத்திருந்திருக்கிறதை நாம் காண்கிறோம். ஒவ்வொருவரும் இப்படியாக கர்த்தருக்குள் இருக்கிற அந்த கொஞ்ச பெலத்தோடே என்னபோராட்டங்கள் வந்தாலும் அவருடைய நாமத்தை மறுதலியாமல் இருந்து கொண்டு போராடுவார்களேயானால், அப்படிப்பட்டவர்களுக்கு திறந்தவாசல் வைக்கப் பட்டிருக்கிறது. அவர்களுடைய ஆத்துமாவும் ஈடேற வாய்ப்பு இருக்கிறது.

எபி.10:36-ல் வாசிக்கிறோம். "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்கு பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" என்று சொல்லுகிறார். மிக நல்ல விசுவாசிகள் கூட

சிலவேளைகளில் பொறுமையை இழந்துவிடுகிறார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கிறிஸ்தவ சகோதரிகளுக்கும் பொறுமை மிகவும் அவசியமான ஒன்றாகவே இருக்கிறது. நம்முடைய தேவன் நீடிய பொறுமை யுள்ளவராயிருக்கிறார். அவரைப்பின்பற்றுகிறதான நாமும் நீடிய பொறுமை யுள்ளவர்களாயிருக்கவேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார். ஆகையால் நாம், தேவன் வாக்குத்தத்தம் செய்த ஆசீர்வாதங்களைப் பெறும்படிக்கு நாம் பொறுமையோடிருக்க போதிக்கப்படுகிறோம். "என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்" என்கிறார் (வெளி.3:10). வசனத்தை வாசிப்பதோடு நின்றுவிடக்கூடாது. சொல்லப்பட்டுள்ள வசனங்களை நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தவேண்டும். அப்பொழுது கர்த்தருடைய கரம் நமக்கு உதவியாயிருக்கும். யோபு என்ற தாசன் பொறுமையோடிருந்து இரட்டிப்பான ஆசீர்வாதங்களை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொண்டான். தேவனுடைய செயலை யோபுடைய வாழ்க்கையில் நாம் காண்கிறோம். அதைப்போல நாமும் பொறுமையாக இருக்கவேண்டிய இடத்தில் பொறுமையுடன் இருக்கும்போது வரப்போகிறதான சோதனைக்காலத்திற்கு நம்மை தப்புவிப்பார். நாம் கர்த்தருடைய வசனங்களுக்குக் கீழ்ப்படியும்போது அவர் நம்மை காக்கிற தேவனாயிருக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளுகின்றோம்.

எபி.10:37-ல் "வருகிறவர் இன்னுங் கொஞ்சகாலத்தில் வருவார், தாமதம்பண்ணார்" எனக் காண்கிறோம். இயேசுகிறிஸ்து வருவார், வருவார் என போதித்துக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் அவர் இன்னும்வரவில்லையே என்று அநேகர் தங்களுடைய ஆத்துமாக்களில் சோர்ந்துபோகிறார்கள். நம்முடைய ஆத்துமா ஈடேற சோர்ந்துபோகாமல் அவருடைய வருகையை எதிர்நோக்கியவர்களாக காத்திருக்கவேண்டும். பத்து கன்னிகைகளில் ஐந்துபேர் எண்ணெய்யோடு மணவாளனை எதிர்கொண்டுபோக ஆயத்தமுள்ளவர்களாக காத்திருந்து மணவாளன் வரும்போது ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூட கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். அதைப்போல நாமும் ஆயத்தமுள்ளவர்களாக இருக்கும்போது அவரோடே ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவோம். ஆகையால் "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு" என்கிறார் (வெளி.3:11). நமக்கு இருக்கிற நம்பிக்கையோடே காத்திருக்கவேண்டும். அந்த நம்பிக்கையில் எள்ளளவும் சந்தேகம் கொள்ளாது நிலைத்திருக்கும்போது தேவனுடைய நித்தியமான இடத்தை சுதந்தரித்துக்கொள்ளுவோம். நம்முடைய நம்பிக்கை என்பது நமக்கு கொடுக்கப்பட்ட கிரீடத்தைப் போன்றது ஆகையால் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடி உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு என்கிறார். யாராவது தனக்கு கிடைக்கப்பெற்ற கிரீடத்தை சாதாரண இடத்தில் வைப்பார்களா என்பதை எண்ணிப்பாருங்கள். அதை பாதுகாப்பான இடத்தில் வைப்பார்கள் அல்லவா? அதைப்போல உங்களுடைய நம்பிக்கையை பாதுகாத்துக்கொள்ளுங்கள் அதைப் பற்றிக்கொண்டிருங்கள். அப்பொழுது உங்களுடைய ஆத்துமா ஈடேறும். கர்த்தருடைய வருகை தாமதம் ஆவதால்

அநேகர் தங்களுடைய நம்பிக்கையில் சோர்ந்துபோகிறார்கள். சிலர் விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப்போகிறார்கள். இப்படிப்பட்டவர்கள்மேல் அவர் பிரியமாயிரார் எனக் காண்கிறோம்.

எபி.10:38-ல் "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்". ஆம் பின்வாகிப்போகிறவர்களை கர்த்தர் நேசிப்பதில்லை ஒருவேளை அப்படிப்பட்டவர்கள் மனந்திரும்பவேண்டும் என எதிர்பார்க்கிறார். ஒரு விசுவாசி தன்னுடைய விசுவாசத்தினாலே நிலைத்திருக்கும்போது அவன் தேவனால் ஆசீர்வதிக்கப்படுகிறான். அவன் பிழைக்கவே பிழைப்பான். "ஜெயங்கொள்ளுகிற வனெவனொ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன் என்கிறார்" (வெளி.3:12). கிறிஸ்தவ வாழ்க்கையில் வெற்றியடைகிறவர்களுக்கு அநேக வாக்குத்தத்தங்களை கர்த்தர் வைத்திருக்கிறார். தேவனுடைய ஆலயத்திலே தாங்கி நிற்கிற தூண்களைப்போல அவர்கள் என்றென்றும் நிலைத்திருப்பார்கள். புதிய நாமத்தினாலும் அவர்கள் அழைக்கப்படுவார்கள். இத்தனை ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள நாம் செய்யவேண்டியது பின்வாங்கிப்போகாமல் விசுவாசத்திலே நிலைத்திருக்க வேண்டும். தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொண்ட நம்முடைய ஆத்துமா ஈடேற தேவனுடைய வசனங்களில் நம்பிக்கைகொண்டு அவைகளில் வளர்ச்சியடையவேண்டும். ஏசா என்ற மனிதனை அறிவீர்கள். அவன் தன்னுடைய சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்டு "பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவிரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்" என்று எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் (எபி.12:17). இவ்விதமாக பின்மாற்றம் அடைகிறவர்களை கர்த்தர் விரும்புவதில்லை. தனக்கு இருக்கிற விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் நிலைத்திருக்கிறவர்களையே தேவன் விரும்புகிறார். அப்படிப்பட்டவர்களுக்கு அநேக வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை வைத்து வைத்திருக்கிறார் என காண்கிறோம். அவைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுடைய ஆத்துமா ஈடேற கர்த்தருடைய வசனத்திற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

எபி.10:39-ல் "நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்" என்கிறார். ஆம் நம்முடைய ஆத்துமா கெட்டுப்போய்விடாதிருக்க நம்முடைய விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவேண்டும். "ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு, நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய்" என்கிறார் (வெளி.3:3). வசனத்தை ஒவ்வொரு வாரமும் தவறாது கேட்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவைகளை தங்களுடைய வாழ்க்கையில் கடைபிடிக்கிறார்களா? என்று பார்த்தால் அவைகளை கேட்பதோடு நின்று விடுகிறார்கள். தங்களுடைய நடைமுறை வாழ்க்கையில் அவைகளைக்

கடைப்பிடிக்க தவறிவிடுகிறார்கள். நீ கேட்டுப்பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு என்ற எச்சரிப்பின் சத்தம்கேட்டும், கைக்கொள்ளாமலும் மனந்திரும்பாமலும் இருக்கும்போது திருடனைப்போல் கர்த்தருடைய வருகையானது இருக்கும். அப்பொழுது அவருடைய சமுகத்திலிருந்து தள்ளப்படுவோம். ஆகையால் அன்பான சகோதரனே, சகோதரியே "உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப்போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள். நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்" என தெளிவாக எபிரெய ஆசான் சொல்லுகிறார் (எபி.3:13,14). ஆரம்பவிசுவாசத்தை விட்டுவிடாதிருக்க நாம் போதிக்கப்படுகிறோம். ஆரம்பவிசுவாசம் நம்முடைய இருதயத்தில் ஆணிவேராயிருக்கிறது. அது முறியும்போது நம்முடைய ஜீவியம் ஆட்டம் காணும். அந்த நம்பிக்கையை விட்டுவிடாதிருப்போமானால் ஆண்டவரோடு இணைந்தவர்களாக இருப்போம். ஆகையால் உங்களுடைய ஆத்துமா ஈடேற உங்களுடைய விசுவாச ஜீவியத்தில் உங்களுடைய தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். அத்தோடு பொறுமையாயிருங்கள், கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கி காத்திருங்கள், இப்படி நிலைத்திருக்கும்போது "உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்" (1பேது.1:9). இந்த ஆத்தும இரட்சிப்பு மிகவும் அருமையானது. அதைப்பெற்றுக்கொள்ள கர்த்தரோடு நிலைத்திருங்கள்.

**நம்முடைய ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதிருக்க நாம் செய்யவேண்டியதென்ன?**

இதற்கான மருந்து வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அது என்னவென்றால்; "நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" என்கிறார் எபிரெய ஆசிரியர் (எபி.12:3). இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவர் யாரென்றால்; நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அவரையே நமக்கு வரக்கூடிய பாடுகளிலும், சோதனைகளிலும், சோர்வுகளிலும் நாம் நினைக்கவேண்டும். தமக்கு விரோதமாக செய்த காரியங்களை அவர் சிலுவை மட்டும் பொறுமையோடிருந்து சகித்தார். அவர்களை மன்னித்து அவர்களுக்காக பிதாவாகிய தேவனை நோக்கி வேண்டிக்கொண்டார். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாது செய்கிறார்கள் அவர்களை மன்னியும் என்று ஜெபித்தார். அவரைப்பிதாவாகிய தேவன் மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினார்.

நீங்களும் உங்களுடைய வாழ்க்கையில் வரக்கூடிய பிரச்சனைகளை இயேசுவைப்போல சகித்து உங்களுடைய ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாமல் இயேசுவை நினைத்து உங்களைத்தேற்றிக்கொள்வீர்களானால் உங்களுடைய ஆத்துமா ஈடேறும். இல்லையேல் சோர்ந்துபோய் என்னைக் கர்த்தர் கைவிட்டு விட்டாரே என்று உங்களுடைய விசுவாசத்தை மறுதலித்தவர்களாக போய்விடுவீர்கள். அப்படிபோய்விடாதிருக்க இயேசுவையும் அவருடைய வசனங்களையும் கவனியுங்கள்.



# கருக்கலைப்பு

## Abortion

*-J.C.Choate*

கருக்கலைப்பு - உலகலாவிய ஒரு பிரச்சனை, மேலும் எண்ணிப்பார்ப்பதற்குக் கூட மிக மோசமான ஒரு காரியம்! - ஆனால் கருக்கலைப்பு என்பது என்ன? கருக்கலைப்பு என்பது முடிவுகட்டும்படி, கொலை செய்வதற்கு அல்லது உயிர்வாழ்கின்ற ஏதோ ஒன்றினை அழிப்பதற்குமான ஒரு செயல்ஆகும். மேலும் விளக்க, கருவுற்றிக்கும் பல இலட்சம் பெண்களைப் பற்றி பேசுகின்றோம், ஆனால் அவர்கள் தங்கள் குழந்தையைப் பெற்றெடுப்பதற்குப் பதிலாக, அவர்கள் கருக்கலைப்பு செய்யவேண்டுமென தீர்மானிக்கிறார்கள். அவர்கள் வெளிப்படையாகவே தங்களுடைய குழந்தையை கொல்லுவதற்கு - கொலை செய்வதைத் தெரிந்தெடுக்கின்றார். உலக முழுவதிலும் உள்ள சட்டங்கள் இதை அனுமதிக்கலாம், அரசாங்கமும் மக்கள் தொகைப் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்தும்படிக்கு இதனை செய்யும்படி ஊக்கப்படுத்தலாம், ஆனால் இதைச் செய்ய விரும்புகின்ற தாய்மார்களும், மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும் இன்னும் பிறந்திராத தங்களுடைய குழந்தையை கொலை செய்யும்படி அனுமதி அளிக்கின்றனர். இப்படிப்பட்ட வெறுக்கத்தக்க செயல்களை செய்யவிரும்புகின்ற மக்கள் நிச்சயமாகவே நான் சொல்லும் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்க விரும்பமாட்டார்கள் இருந்தபோதிலும் ஆனால் அவைகள் உண்மையானவைகள்.

மக்கள் தங்களுடைய குழந்தையை பெற்றுக்கொள்ளாமல் இருக்கும்படி இந்தக் காரியங்களை மீண்டும் மீண்டும் செய்கின்றனர் குறிப்பாக இதுவரை கருக்கலைப்பு செய்யாதவர்கள் கேட்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. என் நண்பரே, பிறந்திராத மனிதக் குழநதைகளின் ஜீவன்கள் காப்பாற்றப்படுகின்றதைக் காட்டிலும், புலி மற்றும் வேறு விலங்குகள் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை உணருகின்றீர்களா? நீங்கள் அரிதான விலங்குகளைக் கொன்றதற்காக அல்லது மயிர் உதிர்ந்த ஒரு கழுகின் முட்டைகளை அழித்ததற்காக சட்டத்தின் பிடியில் சிக்குண்டு துன்பத்திற்குள்ளாகி, ஒருவேளை ஒரு பெரிய தொகையினை அபராதமாக செலுத்த நேரிடலாம் அல்லது சிறைக்குக் கூட செல்லலாம் (மயிர் உதிர்ந்த கழுகின் முட்டைக்கான அபராதத் தொகை எவ்வளவு? (ஆண்டனி மர்ஃபியின் பதில்: குற்றவியல் தண்டனை அதிகபட்சம் ஐந்தாண்டுகள் சிறைதண்டனையோடு 25,000 டாலர்கள் மற்றும் சிவில் மீறல்களுக்காக அதிகபட்சம் 10,000 டாலார்களும், அடையாள மீறல்களுக்காக 250 டாலர்களும்

அபராதமாகும். நிறுவனங்களுக்கு அபராதம் இரட்டிப்பாக இருக்கும்), ஆனால் எவ்விதப் பிரச்சனையுமின்றி உங்களுடைய குழந்தையை நீங்கள் கொல்லலாம். நாய்களையும் பூனைகளையும் எல்லாவிதமான விலங்குகளையும் பாதுகாக்கும் நோக்கத்திற்காக மட்டுமே அநேக சங்கங்கள் உலக முழுவதும் சூழ்ந்துள்ளன. இச்சங்கங்கள் கைவிடப்பட்ட மக்களுக்கு என்னென்ன தேவையோ, அத்தனையும் கொடுத்து அவர்களைப் பராமரிக்கும் படிக்கும் அவர்களை தவறாக நடத்தாதபடிக்கு அவர்களை ஊக்கப்படுத்தும்படிக்கும், பிரச்சாரங்களை நடத்தி அவர்களுக்காக பெருமளவில் பணத்தை செலவழிக்கின்றனர், ஆனால் மனிதக் குழந்தைகள் மரித்துக்கொண்டிருக்கிற போது இவர்கள் எங்கே இருக்கிறார்கள்? மனித வாழ்வைக் காட்டிலும் விலங்கின வாழ்க்கைக்கு மதிப்பளிக்கிறவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஏன் இக்குழந்தைகள் கருச்சிதைவு அடைய வேண்டுமென்று பெரிய அளவிலான விவாதங்கள் உள்ளன. இவர்களில் பலர் திருமணத்திற்கு வெளியே பிறந்தவர்கள் என்றும், பலாத்காரத்தின் விளைவாக வந்தவர்கள் அல்லது பலமில்லாதவர்களாக அல்லது ஏதோ ஒருவகையில் இயல்பானவர்களாக இருக்கமாட்டார்கள் என்றும் சிலர் வாதிடுகின்றனர். ஆனால் நன்நடத்தை, நேர்மைநிலை மற்றும் வலிநிறைந்த விளைவுகளைக் குறித்த அக்கறை கொண்டிருக்கிற மக்களாயிருந்தால், அவர்கள் கர்ப்பம் தரிப்பதற்கு முன்பாகவே சட்டப்படியான கவலைகளால் வழிநடத்தப்பட்டிருக்க வேண்டும்.

திருமணத்திற்கு முன்பான பாலியல் உறவு முறைகள் இந்த நவீன காலத்தில் சகஜமாக மாறியிருக்கிறது. இப்படிப்பட்ட பாவத்தை ஏற்றுக் கொள்வதைப் பொறுப்படுத்தாத இவ்வுலகத்தால், தங்களுடைய பாவங்களின் வேதனைநிறைந்த விளைவுகளை தவிர்ப்பதற்கு தங்களுடைய ஒழுக்கமற்ற செயல்களினால் கொலை செய்யக்கூடிய ஒரு மோசமான குற்றச் செயல்கள் தொடருகின்றன. இது போன்று கற்பழிப்புகள், சராசரியாக, கண்டிக்கப்படாத பாலியல் வன்முறைகள் மற்றும் கற்பழிப்பு போன்றவற்றால் ஒரு சிலர் கர்ப்பம்தரிக்கிறவர்களாக மாறுகின்றனர். மேலும், மருத்துவர்கள் இந்த சிசுக்கள் ஊமையாகவோ மனவளர்ச்சிக் குன்றியவர்களாகவோ பிறப்பார்கள் என்று தவறாகக் கணிக்கின்றனர். ஆனால் சாக்குப்போக்கு கூறுவதற்கு மாறாக, மனித வாழ்வை அழிப்பதற்கு நாம் அனுமதிக்கப்படவில்லை என்பதே உண்மையாயிருக்கிறது.

நான் ஏன் இந்தமாதிரியான ஒரு பாடப்பகுதியில் அக்கறையுள்ள வனாயிருக்கிறேன் என்று நீங்கள் அறிய விரும்பலாம். இது என்னுடைய வேலையில் ஒன்றாக இருக்குமோவென நீங்கள் கேள்வி எழுப்பலாம். வேதாகமத்தில் கொலை செய்தல் கண்டிக்கப்படுகிறது என்று கூற நான் துரிதப்படுவேன். எனவே இது என்னுடைய வேலையாயிருக்கிறது. உலகமுழுவதும் பல இலட்சம் மனித உயிர்கள் அழிந்து கொண்டிருக்கிற வேளையில், நான் மனிதனாக இருக்கின்றபடியினாலும், அமைதியுடன்

கழிப்பதற்கு நான் மனிதவாழ்வை அதிகமதிகமாக மதிக்கின்றபடியினாலும் இது என்னுடைய வேலையாகவும் இருக்கின்றது. நாம் போருக்கான ஆலோசனையை எதிர்க்கிறோம். மனிதவர்க்கத்தினை துன்புறுத்த வேண்டாமென்று நாம் அரசாங்கங்களை நோக்கி கூக்குரலிடுகிறோம். இருந்தபோதிலும் நம்முடைய சொந்த மருத்துவமனைகளிலும் மருந்தகங்களிலும் நமது சொந்த மருத்துவர்களும், தாதிமார்களும் ஒவ்வொரு நாளும் கருக்கலைப்பு செய்தலை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

நீங்கள் சித்திரவதையைக் குறித்து பேசுங்கள்: சமீபத்தில் இதன் பொருட்டு கருக்கலைப்பு செய்யும் செயலானது சரியாகப் படமாக்கப்பட்டது, கருவினை, ஒரு புதுசிசுவை, தாயின் கருப்பையில் ஒரு மனித ஜீவனைக் காண்பித்து, அதன்பின் கருவியின் மூலம் மிகச் சிறிய உதவியற்ற சிசு, அதன் உடற்பாகம் கிழிக்கப்படத்தக்க வகையில், இது ஒரு நபராக இல்லாத வண்ணமாக, தாயின் கருப்பையிலிருந்து அது அகற்றப்பட்டும் காட்சி காண்பிக்கப்பட்டது. அச் செயல் தொடர்ந்து நடைபெறுகையில், அந்த சிசுன் முகத்தில் அதன் வேதனை காணப்படும் வண்ணமாக பதிவு செய்யப்பட்டிருந்தது. சில வேளைகளில், இது கருப்பையை விட்டு வெளியே இழுக்கப்படும்போது, அந்த மிகச்சிறு உருவில் இன்னும் உயிர் இருக்கிறது, கர்ப்பத்திலிருந்து வெளியேற்றப்படும்படிக்கு அச்சிசு கழிவுப்பொருள் போடும் ஒரு குப்பைக் கிடங்கில் கொட்டப்பட்டு, இறுதியாக ஒரு ஒதுக்கப்பட்ட குப்பை கிடங்கில் தூர கொட்டப்படுகிறது அல்லது எரிக்கப்படும்படி ஒரு எரியூட்டும் பகுதியில் தூக்கி எறியப்படுகிறது.

– தொடரும்

## ஜெபியுங்கள்



- இம்மாத ஊழியங்களுக்காக...
- பெண்பிள்ளைகளுடைய பாதுகாப்பிற்காக...
- இதழின் வாசகர்களுக்காக...
- மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நேயாளிகளுக்காக...
- தேசத்தலைவர்களுக்காக...
- அரசியல் அமைப்புச் சட்டம் பாதுகாக்கப்பட...
- நம்நாட்டு நீதிபதிகளுக்காக...

"ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் நீதிமான் செய்யும் வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" - யாக்கோபு 5:16

**நடப்புச் செய்திகள்**

- மதுரை ரயில் நிலையத்தில் இருந்து இருவழி ரயில் பாதையாக மாற்ற முயற்சிகள் நடைபெற்று வருகிறது.
- ஐ.நா மற்றும் உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணைகளை சோதனை செய்து அச்சுறுத்தி வருகிறது.
- துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உலகின் பல நாடுகளிலிருந்து உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.


# 10 சம்பவங்களை அறிவீர்களா?



- பத்து கட்டளையைக் கர்த்தரிடத்தில் பெற்றவன் - மோசே (யாத்.20:1)
- பத்துவிதமான வாதைகளை எகிப்து தேசத்தில் கண்டவன் - பார்வோன் ராஜா (யாத்.12:30)
- பத்து முறை யாக்கோபின் சம்பளத்தை மாற்றியவன் - லாபான் (ஆதி.31:7)
- பரலோகராஜ்யத்தின் உவமையில் மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்டவர்கள் பத்து கன்னிகைகள் அதில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்கள் மற்ற ஐந்துபேர் புத்தியற்றவர்கள் - (மத்.25:1)
- ஒரே நேரத்தில் இயேசுவினால் சுகமாக்கப்பட்டவர்கள் பத்து குஷ்டரோகிகள் ஆனால் நன்றி சொன்னவன் ஒருவன் மட்டுமே - (லூக்.17:14)

## நான் யார்? – Who Am I?

- நான் இயேசுவுக்கு அன்பாயிருந்தவன்
- அவர் மறுரூபமாகும்போது அங்கிருந்தேன்
- எருசலேம் சபையில் தூண்களாக எண்ணப்பட்டவர்களில் நானும் ஒருவன்
- பஸ்காவை ஆயத்தம் பண்ண இயேசு எங்களுக்கு சொன்னார்
- யவீரு வீட்டிற்கு இயேசுவோடு சென்றேன்
- என் தகப்பன் பெயர் செபதேயு
- நான் பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்டேன்



## வேத அறிவுப்போட்டி 268-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. எலிசா, பிரதானியை | - 2இரா.7:2 |
| 2. ஆம் | - 1 தெச.5:15 |
| 3. இல்லை | - 1 நாளா.27:23 |
| 4. சரி | - 1 தீமோ.2:10 |
| 5. 2 லட்சம்பேர் | - 2 நாளா.17:17 |
| 6. தீமோத்தேயு | - 2தீமோ.3:11 |
| 7. எஸ்றா | - எஸ்றா 7:12 |
| 8. தேவதூதரையும் | - எபி.13:2 |
| 9. நெகேமியா | - நெகே.5:18 |
| 10. பரிசுத்தமாக்குங்கள் | - யாக்.4:8 |

### சரியான பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1. Mrs. சாந்தக்குமாரி | - நாசரேத் |
| 2. Mrs. ஜெநிதர்மராஜ் | - திருநெல்வேலி |
| 3. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 4. J. பிச்சை | - சங்கரலிங்கபுரம் |
| 5. S. ஜாய்சந்திரகாந்தா | - நெல்லூர் |
| 6. Mrs. ஜாய்மேத்யு | - வி.கே.புரம் |
| 7. Sis. விஜயா காந்தி | - கூத்தம்பாக்கம் |
| 8. Mrs. ஹெத்சி செல்வின் | - சென்னை |
| 9. C. அருள்ராஜ் | - சென்னை |
| 10. Mrs. பியூலா ஜேசுரத்தினம் | - புதுச்சேரி |
| 11. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 12. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |
| 13. Mrs. கிறிஸ்டோபல் சாலொமோன் | - கோவை |
| 14. B. ஸ்டெல்லாம்மா | - கூத்தூர் |
| 15. Mrs. இளவரசி ஜோபிதா | - துடியலூர் |
| 16. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 17. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 18. J.S. ஜெயா மேரித்தாய் | - திண்டுக்கல் |
| 19. S. அசோக்குமார் பிரின்ஸ் | - தூத்துக்குடி |
| 20. R. ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 21. Mrs. ஆலிவ்ஜெயபாலன் | - கோவை |
| 22. R. பாரதி | - கோபி |
| 23. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் | - திருநெல்வேலி |
| 24. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 25. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 26. Mrs. தேவிராஜசிங் | - திருப்பூர் |
| 27. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 28. Mrs. சந்திராஆல்பர்ட் | - திருநெல்வேலி |
| 29. D. அன்புக்கமலம் | - கோவை |
| 30. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 31. Mrs. ஃபுளோரா சுந்தர் | - மதுரை |
| 32. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 33. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 34. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 35. T. ராஜாத்தி | - கோம்பை |
| 36. Mrs. ருக்மணிஜெயசீலன் | - தேனி |
| 37. Mrs. ஜேன் தர்மராஜ் | - திருநெல்வேலி |
| 38. Mrs. ரூத்ஜெயராணிஅன்புராஜ் | - திருநெல்வேலி |



## வேத அறிவுப்போட்டி 269-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. ஆமான் | - எஸ்தர் 3:6 |
| 2. வெட்கப்படுவதில்லை | - 1 பேது.2:6 |
| 3. யோபு | - யோபு 38:28 |
| 4. பரிசுத்த ஆவியினாலே | - 2பேது.1:21 |
| 5. பிசாசுகளுக்கு | - சங்.106:37 |
| 6. ஒழிந்துபோம் | - 1யோவா.2:17 |
| 7. ஜீவஊற்று | - நீதி.10:11 |
| 8. பெர்கமு | - வெளி.2:17 |
| 9. மிகுந்த | - பிர.9:18 |
| 10. எடுத்துக்கொள்ளப்படும் | - மத்.25:29 |

### சரியான பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1. Mrs. ஜெயாபாணி ஜெபராஜ் | - மேற்கு தாம்பரம் |
| 2. Mrs. தங்கப்புஸ்பம் | - நாசரேத் |
| 3. Mrs. ஃபிராங்கலினா ஜான் | - ஊட்டி |
| 4. S. ஜாய் | - நெல்லூர் |
| 5. C. அதிசயம் | - பனைகுடி |
| 6. S. அசோக்குமார்பிரின்ஸ் | - தூத்துக்குடி |
| 7. T. ராஜாத்தி | - கோம்பை |
| 8. Mrs. நிர்மலா எழில் | - மாதவரம் |
| 9. R. பாரதி | - கோபி |
| 10. Mrs. பியூலா ஜேசுராஜன் | - புதுச்சேரி |
| 11. Mrs. ஜான்சி | - ஆனைமலை |
| 12. Mrs. தேவிராஜசிங் | - திருப்பூர் |
| 13. Mrs. ரூக்மணிஜெயசீலன் | - தேனி |
| 14. Mrs. ஹெத்சி செல்வின் | - சென்னை |
| 15. Sis. விஜயகாந்தி | - கூத்தம்பாக்கம் |
| 16. S. ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 17. J. பிச்சை | - சங்கரலிங்கபுரம் |
| 18. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 19. Mrs. நவரத்தினம் | - நாசரேத் |
| 20. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் | - திருநெல்வேலி |
| 21. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 22. C. அருள்ராஜ் | - சென்னை |
| 23. A. அன்னாள் ஜெபக்கனி | - கோவை |
| 24. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 25. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 26. Sis. ஃபுளோரன்ஸ் சீத்தர் | - சென்னை |
| 27. Mrs. மேரி நிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 28. Mrs. ஜாய் மேத்யூ | - வி.கே.புரம் |
| 29. Mrs. ஃபிளோரா சுந்தர் | - மதுரை |
| 30. A. டெய்சி | - தூத்துக்குடி |
| 31. Mrs. ஆலிஸ் குணசீலி | - தூத்துக்குடி |
| 32. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் | - திருநெல்வேலி |
| 33. Mrs. சந்திரா ஆல்பர்ட் | - திருநெல்வேலி |
| 34. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 35. Mrs. வசந்தா ரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 36. Mrs. கிறிஸ்டோபல் சாலொமோன் | - கோவை |
| 37. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |
| 38. J. ஆலிவ் | - கோவை |
| 39. B. ஸ்டெல்லாம்மா | - கூத்தூர் |
| 40. D. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 41. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 42. J.S. ஜெயாமேரித்தாய் | - திண்டுக்கல் |
| 43. A. டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 44. K. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 45. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |


"எனக்கு உணர்வைத் தாரும்;
அப்பொழுது நான் உமது வேதத்தைப்
பற்றிக்கொண்டு, என் முழு இருதயத்தோடும்
அதைக் கைக்கொள்ளுவேன்" சங்கீதம் 119:34

ப.ஏ

வேதாகம கதாபாத்திரங்கள்

Bible Characters

13




## பரிசுத்த வேதாகமத்தில் யாக்கோபு
## Jacob In The Holy Bible

1. ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் பிறந்த இரண்டாம் குமாரன் - ஆதி.25:26
2. யாக்கோபு குணசாலி - ஆதி.25:27
3. யாக்கோபின் பொருத்தனை - ஆதி.28:10
4. இஸ்ரவேல் என அழைக்கப்பட்டான் - ஆதி.32:28
5. யாக்கோபின் குடும்பத்தார் 70 பேர் - ஆதி.49:26
6. அந்நிய தெய்வங்களை புதைத்துப்போட்டான் - ஆதி.35:2
7. கர்த்தர் யாக்கோபை தமக்காக தெரிந்துகொண்டார் - சங்.135:4
8. அநேகர் பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபோடு பந்தியிருப்பார்கள் - மத்.8:11,12
9. யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்குப் போவோம் - ஏசா.2:3
10. யாக்கோபின் ஆயுசு நாட்கள் 147 - ஆதி.47:28

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

*யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதல் உண்டா?*

**விடை:** இல்லை "யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை"... எண்.23:23



பு.ஏ

**வேதாகம கதாபாத்திரங்கள்**
**Bible Characters**

**14**




## பரிசுத்த வேதாகமத்தில் மாற்கு
## Mark In The Holy Bible

1. இவனுடைய யூத பெயர் யோவான் - அப்.12:12
2. இவர்களுடைய வீட்டிலே ஜெபக்கூட்டம் - அப்.12:12
3. பர்னபா, பவுலோடு ஊழியத்தில் இருந்தவன் - அப்.15:37
4. பவுலோடு சிறைச்சாலையில் இருந்தவன் - கொலோ.4:10
5. பர்னபாவுக்கு இனத்தான் (தாயின் சகோதரன்) - கொலோ.4:10
6. இந்த வாலிபன் மாற்கு எனக் கருதப்படுகிறது - மாற்.14:51,52
7. சுவிசேஷத்தின் ஆரம்பம் என எழுதுகிறான் - மாற்.1:1
8. இயேசுசெய்த அற்புதங்களைப் பட்டியலிடுகிறான் - மாற்.5:1-43
9. இயேசுவின் கட்டளை உலகமெங்கும்போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் - மாற்.16:15
10. அப்போஸ்தலர்களாலே நடந்த அடையாளங் களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார் - மாற்.16:20


**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**மாற்குவை என் குமாரன் என்று சொல்லும் அப்போஸ்தலன் யார்?**

**விடை:** பேதுரு "...என் குமாரனாகிய மாற்கும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" (1பேது.5:13)



இயேசுவைப் பற்றி உலகிற்குச் சொல்
அவர் உன்னை நேசிக்கிறார்
அவர் உனக்காக மரித்தார்
அவரே வழியும், சத்தியமும்,
ஜீவனுமாய் இருக்கிறார் - மாற்கு 16:15





Tell the World about Jesus

He is the Way, Truth and Life

and He said unto them, Go ye into all the world and

preach the gospel

to every creature - Mark 16:15




**‘ஒரே வழி’**

**தபால் வழி**

**வேதபாடம்**

**The Master Course**

**படிக்க**

**விரும்புகிறவர்கள்**

இன்றே தபால் செலவுக்காக

ரூபாய் 50-ஐ அனுப்பி,

ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள்

வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

பெண்கள் பகுதி

# விசேஷித்த மேன்மை *(பகுதி – 1)*
# Special Distinction (Part - 1)

*-Glory Arjunan*



இன்றைய நாளில் பெண்கள் இப்பூமியிலும், விண்வெளியிலும் எத்தனை எத்தனையோ சாதனைகளைப் படைத்து மண்ணுக்கும், விண்ணுக்கும் மகிமையைக் கொண்டு வருகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் சுனிதா வில்லியம்ஸின் விண்வெளி சாதனை பூமியை வியக்கப்பண்ணினது. பெண்களாகிய நம்மெல்லோருக்கும் இது பெருமையை மாத்திரமல்ல எதையும் சவாலாக்கிக் கொள்ளும் ஊக்கத்தையும் அளிக்கிறது. இருந்தபோதிலும் அப்போஸ்தலனாகிய பேதுரு, "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்... அவருடைய வாக்குத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்" (2பேது.3:10,13) என்று எழுதியிருக்கிறதை வாசிக்கும்போது எல்லாம் மாயை என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

ஆம், எல்லாம் மாயை! "சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது" (பிர.1:14) என்கிறார் ஞானி சாலொமோன். இப்படியிருக்க அழிந்துபோகாத **ஆவிக்குரிய காரியங்களைச் (Spiritual Matters)** சிந்தித்து, அதைப் பற்றிக்கொண்டு, நீதிவாசமாயிருக்கும் புதிய இடத்திற்குச் செல்ல நம்மை ஆயத்தப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவோம். இம்முயற்சிக்கு உதவியாக வேதாகமத்தில் விசேஷித்த இடத்தினைப் பிடித்துள்ள சில பெண்களை நமக்கு மாதிரியாகக் கொள்வோம்.

**சிலுவையின் கடைசிபரியந்தமும் (Last At the Cross) இருந்தவர்கள்:** இயேசுவின் சிலுவைப் பயணத்தில் கடைசிமட்டும் இயேசுவோடு இருந்தவர்கள் மகதலேனா மரியாளும் யோசேயின் (இயேசுவின் தாய்) தாயாகிய மரியாளும்தான். இயேசுவோடு உண்டு உறங்கி ஊழியஞ்செய்த இயேசுவின் சீஷர்களெல்லாரும் ஓடிவிட்டனர். ஆனால் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனாகிய யோசேப்பு என்பவன் ஒரு கனம்பொருந்திய ஆலோசனைக்காரன், இவன் வந்து இயேசுவின் சரீரத்தைப் பெற்று, மெல்லி துப்பட்டியை வாங்கிக் கொண்டு வந்து, மரித்த இயேசுவை சிலுவையிலிருந்து இறக்கி, அந்தத் துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு கல்லைப் புரட்டிவைத்து இவ்விதமாக அடக்கம்பண்ணினான். "அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்" (மாற்.15:47). அப்படியானால் இந்த ஸ்திரீகள் கல்லறைவரைக்கும் சென்றிருக்கிறார்கள். ஆனால் சீஷர்களோ பயந்து தங்களை ஒளித்துக்கொண்டார்கள். "பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" இயேசுவின்மேல் முழுமையான அன்பு கொண்டிருந்ததால் அந்த

இரு ஸ்திரீகளும் கல்லறை வரை சென்றார்கள். ஒருவேளை இயேசுவின் தாய் என்பதால் இயற்கையான தாய்அன்பு மரியாளிடம் காணப்பட்டது என்று சொல்லலாம். ஆனால் மகதலேனா மரியாளிடம் எப்படி அந்த பூரண அன்பு காணப்பட்டது? இயேசு அவளிடமிருந்த ஏழு பிசாசுகளை அவளை விட்டு அகற்றியிருந்தார். பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டபடியினால் அவ்வாறு அன்பு கூர்ந்தாள். பிசாசின் பிடியிலிருந்த அவள் தேவனுடைய பிள்ளையாக மாற்றப்பட்டாள். இது எப்பேர்பட்ட விடுதலை! அன்பு சகோதரியே, உங்களையும் கூட தேவன் தமது குமாரன் மூலமாக பிசாசின் கிரியைகளாகிய பல்வேறு பாவங்களிலிருந்து விடுவித்திருக்கலாம். விடுதலையின் சந்தோஷத்தை அனுபவிக்கின்ற நீங்கள் முடிவுபரியந்தம் இயேசுவின் மேல் அன்புகூர வேண்டியது அவசியமல்லவா? உலகத்தில் அன்புகூராதிருங்கள். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையாயிருக்கிறது. உலக ஜனங்களுக்கு பயந்து கொண்டு அந்த சீஷர்களைப் போல் உங்களை ஒளித்துக்கொள்ளாதீர்கள். முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் என்று வேதம் கூறுகிறது.

**முதலாவது கல்லறையினிடத்தில் இருந்தவள் (First At The Tomb)**

இயேசு அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் அதாவது வாரத்தின் முதல்நாளில் சுகந்தவர்க்கமிடும்படி கல்லறையினிடத்திற்கு மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் வந்தார்கள். ஆனால் "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார்" (மாற்.16:9). மற்ற ஒருவரும் முதல் முதல் இயேசுவை தரிசிக்காமல் மகதலேனா மரியாள் மட்டும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றதற்குக் காரணமென்ன? கல்லறையில் இயேசுவைக் காணவில்லை என்ற செய்தி அறிந்து, மற்ற சீஷர்களும் ஸ்திரீகளும் கல்லறையினிடத்திற்கு வந்து பார்த்து விட்டு மீண்டும் தங்கள் இடத்திற்குத் திரும்பிப் போய்விட்டார்கள் (யோவா.20:1-10).

ஆனால் மகதலேனா மரியாளோ கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள். இயேசுவின் மேல் அவள் கொண்டிருந்த அன்பினால் அவள் கல்லறையை விட்டு அகலாதிருந்தாள். அதனால் இயேசுவை முதல் முதல் தரிசிக்கும் பாக்கியம் பெற்றாள். அன்பு சகோதரியே, கர்த்தருடைய நாளிலே கர்த்தருக்கு சுகந்தவர்க்கமிட வந்தவள் கர்த்தரை தரிசித்தாள். நீங்கள் கர்த்தருடைய நாளிலே எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? சபையாகக் கூடி தேவனை ஆராதிக்கவா அல்லது இப்பிரபஞ்சத்தின் தேவைனைப் பிரியப்படுத்தவா? சிந்தியுங்கள்.

இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் உலக சம்பத்தைக் காட்டி தன்னைப் பணிந்து கொள்ளும்படி தந்திரமாக செயல்படுவான் உங்களுடைய உலகப்பிரகாரமான தேவைகள், மற்றும் விருப்பங்களை அறிந்தவனாய் உங்களை மோசம்போக்கும்படி சுற்றித்திரிகிறான். இயேசுவையே வஞ்சிக்கத் திட்டமிட்டவன் உங்களை விட்டுவிடுவானா? மத்தேயு4:10,11-ல் இயேசுவைப் பார்த்து நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத்தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்" வேதவசனத்தினால் அவனை ஜெயித்தார். பிசாசு கிறிஸ்தவர்களையே குறிவைத்துள்ளான். ஞாயிற்றுக்

கிழமை தான் சகல வைபவங்களும், தேர்வுகளும் நடைபெறுகின்றன. என்னசெய்வது எனக்கு வேலைகிடைக்காமல் கஷ்டப்படுகிறேனே என்று சொல்லி வாரத்தின் முதல் நாளை கர்த்தருடைய சமூகத்தில் செலவிட்டு தேவனை ஆராதிப்பதைத் தவிர்த்து உலகவேலையை நோக்கி ஓடுகின்றனர். கர்த்தருடைய நாளை இவர்கள் கொள்ளையடிக்கின்றனர். சகோதரியே, சற்று சிந்தியுங்கள் "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (எபி.10:25). இல்லையெனில் கர்த்தருடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும்.

**முதலாவது உயிர்த்தெழுதலை அறிவித்தவர்கள் (First To Proclaim Resurrection)**

கர்த்தருடைய தூதன், "சீக்கிரமாய்ப் போய், அவர் (இயேசு) மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச்சொன்னேன் என்றார். அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்" (மத்.28:7,8). பொதுவாக ஒரு செய்தி வெகு சீக்கிரத்தில் பரவ வேண்டுமென்றால், பெண்களிடம் கூறிவிட்டால் போதும் பல இடங்களுக்கு மின்னல் வேகத்தில் அந்த செய்தி சென்றடைந்து விடும் என்பார்கள். ஸ்திரீகளுக்குள்ளே இந்தகுணம் இருக்கத்தான் செய்கிறது. அதனால் தான் என்னவோ, கர்த்தருடைய தூதன் இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை ஸ்திரீகளின் மூலம் சீஷர்களுக்கு அனுப்புகிறார். எப்படியோ, இந்த மாபெரும் நற்செய்தியை உண்மையான சந்தோஷத்துடன் மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் முதன் முதலாக சீஷர்களுக்கு அறிவித்தார்கள்.

சகோதரியே, நீங்கள் என்னநினைக்கிறீர்கள்? ஸ்திரீகளுக்கு உபதேசம் பண்ணும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்கிறீர்களா? வேதவாக்கியங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்வோம். உபதேசம்பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; ...(1தீமோ.2:12) என்று வேதம் கூறுகிறது. வேதவாக்கியத்தின்படி நாம் உபதேசிக்கவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும் அதிகாரத்தைப் பெறவில்லை. ஆனால் மத்.28:7,8-ன்படி கர்த்தருடைய அடக்கம் உயிர்த்தெழுதலின் செய்தியை நம்தோழிகளுக்கு அறிவிக்கலாமே. கர்த்தருடைய காரியத்தில், கர்த்தருடைய சபை வளர்ச்சிக்கான காரியத்தில் ஈடுபடுவதில் முதலாவதாக இருப்போம்.

## கேள்விகள்

1. அவருடைய (கர்த்தருடைய) வாக்குத்தத்தின்படியே எவைகள் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்?
2. சிலுவையின் கடைசி பரியந்தமும் இயேசுவோடு இருந்த ஸ்திரீகள் யாவர்?
3. பூரண அன்பு என்னசெய்யும்?
4. இயேசு உயிர்த்தெழுந்த பின்பு யாருக்கு முதல் முதல் தரிசமானார்?
5. சீக்கிரமாய்ப் போய் இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள் என்றது யார்?

# நித்திய பலியான இயேசு கிறிஸ்து

Jesus Christ, Eternal Sacrifice

பெண்கள் பகுதி

-Betty



## பண்டிகைகளின் நோக்கம்

## The Purpose of the Feasts

பஸ்கா பண்டிகை மற்றும் இஸ்ரவேலர் தங்களுடைய பாவங்களுக்காகச் செலுத்த வேண்டியிருந்த மிருகபலி போன்றவற்றின் நோக்கத்தைக் கற்றுக்கொள்ள நாம் வேத வாக்கியங்களை உற்று நோக்கும் வேளையில், அவைகள் எகிப்திலிருந்து வெளியேறுவதைப் பின்நோக்கி சுட்டிக்காட்டும் நினைவுப்படுத்துதல்கள் மட்டுமல்ல மேலும் தேவனால் சுத்திகரிக்கப்படுவதற்கும் அவைகள் வரப்போகிற பஸ்கா ஆட்டுக்குட்டியையும் இயேசு கிறிஸ்து என்பவரிலுள்ள பாவ-பலியையும் குறித்த தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட அறிக்கைகளாயிருந்தன. இன்று செய்யப்படுகிறதான கிறிஸ்துவின் மரணத்தின் நினைவு கூருதலாக சபைக்குக் கொடுக்கப்பட்ட அந்த நினைவு விருந்து பழைய ஏற்பாட்டின் விருந்தைப் போன்றதே ஆகும்: இது சிலுவைக்குக் கொண்டு சென்று அவருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கப்பண்ணுகிறது. "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1கொரி.11:26).

### கர்த்தருடைய பந்தியின் அறிமுகம்

இந்தப் பந்தியின் ஆரம்பம் என்ன?

"வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, "பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்...." (லூக்.22:14-16,19,20).

முன்பதாக, இந்த நினைவு விருந்தைக் குறித்து ஒரு தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயத்தில், இயேசு இவ்வாறு சொல்லியிருந்தார்:

"நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்...... நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை..... என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன்

உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்" (யோவா.6:51-54) என்றார்.

சிலர் இயேசு ஆவிக்குரிய உணவின் மறைபொருளாக பேசிக்கொண்டிருந்தாரென கருதலாம். உண்மையாகவே, ஜீவனுக்கான அப்பத்தைப் பற்றிய அவருடைய உரையாடல் அவருடைய போதனையின் ஆரம்பத்தில் அந்தப் பொருளைக் கொண்டிருந்தது. இதைப்போலவே யோவான்4:10-14-ல் சொல்லப்பட்ட வார்த்தைகளும் இந்த விவாதத்தில் ஜீவத் தண்ணீரென இயேசு அழைத்த ஆவிக்குரிய போஷாக்கைப்பற்றிய விஷயத்தோடு சம்பந்தப்படுகிறது. இந்த இரு பகுதிகளில் தாமே ஜீவ அப்பமும் ஜீவத்தண்ணீரு மாயிருக்கிறாரென சொல்லுவதில் அவர் அவைகளைத் தமக்கு மறைபொருளாக வைத்தார்.

இயேசு தம்முடைய சீஷர்கள் தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ணவேண்டுமெனச் சொன்னார்.

ஆனால் இந்த உதாரணத்தில், இயேசு அப்பம் (தண்ணீர் இன்னும் மற்றவை) உருவணியாக வைக்கப்பட்ட இடத்தில் ஆவிக்குரிய உணவைப் பற்றிய கருத்திலிருந்து விலகி சொற்களுக்கு நேரடியான பொருளை உடையதாய் இருக்கக் கூடாததும் பிரத்தியேகமாக சொற்களின் வடிவமாகக் கருதக் கூடாததுமான வசனப் போக்கிற்குத் திரும்பினார். அவர் **தம்முடைய சீஷர்கள் ஜீவனைப் பெற்றிருக்க தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம் பண்ண வேண்டுமென** சொன்னார். ஏனென்றால் கவனித்துக் கேட்கிறவர்கள் புரிந்துகொள்ளமுடியாத இப்பேர்பட்ட **சூசகமான** ஆழமான கூற்றிற்கு மறைபொருளாகவுங்கூட ஒப்பானதொன்றுமில்லை, மேலும் "…..அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" (யோவா.6:66).

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கப்புறம், சிலுவையில் பலியிடப்பட்ட அவருடைய சரீரத்தின் வாராந்திர நினைவுகூருதல்களை இன்றைய உலகில் வாழ்கின்ற விசுவாசிகள் அவருடைய கூற்றினைக் தோற்றத்தில் கண்டு அவர் சொல்லிய முழுக் கருத்தினையும் சரியாக புரிந்து கொள்ளமுடியும். **அவர் தம்முடைய மரணத்தின் நினைவுகூருதலாகயிருப்பவற்றை தொடங்கவிருக்கும் ஆவிக்குரிய விருந்தைக் குறித்த கருத்தினை அவர் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்** அந்த நிகழ்ச்சியின் போதும் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவிலும் அவர் **பங்கு கொள்ளவிருக்கிற தம்முடைய சரீரத்தைக்குறித்தும் இரத்தத்தைக்** குறித்தும் பேசினார். இந்த ஒத்த சொற்றொடர் நிதானமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவருடைய நாளில் கவனித்துக்கேட்டு இரத்தம் புசிப்பதை அனுமதிக்காத பழைய ஏற்பாட்டு கட்டளைக்கு பழக்கப்பட்டு போனவர்களுக்கு இயேசுவின் கூற்று வெறுப்பூட்டுகின்ற சமயக்கொள்கைக்கு மாறுபட்ட கருத்தாக இருந்திருக்கவேண்டும். அவர் இதை அறிவார் ஆயினும் அந்த பூரணமான அறிவுள்ள சத்தியங்கள் உருவாக்கப்பட அந்த அறிமுகம் அவசியமாயிருந்தது.

# ஒன்பது வகையான சிறுதானியங்கள்
# நம் தேசத்தில் விளைகின்றன
# கர்த்தருக்கு ஸ்தோத்திரம்




- நன்றி நியூ இந்தியா சமாச்சார்

# வாசகர் கடிதங்கள்...

கர்த்தர் உங்களோடிருப்பாராக! கர்த்தர் உங்களையும் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

அன்புள்ள சகோதரருக்கு தெரிவிப்பது யாதெனில், நான் வீடு மாற்றளாகி விட்டேன். உங்களுடைய மாத இதழினை என் வீட்டு விலாசத்திற்கு அனுப்பவும்.

கர்த்தர் உங்களோடிருப்பாராக!

கர்த்தரின் அன்பில் உங்கள் சகோதரன்,
எட்வின்நெல்சன்புர்ட்டாடோ
பெங்களூர்

ஐயா ஸ்தோத்திரம். எப்படியிருக்கிறீர்கள் தங்களுக்காக ஜெபிக்கிறேன்.

தங்களுடைய மாத பத்திரிக்கை எனக்கும் எங்கள் குடும்பத்துக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக உள்ளது.

நீங்கள் எழுதி வெளியிட்ட ஒரு அருமையான புத்தகம் "மகிழ்ந்து களிகூரு" பெண்களுக்கான சிறப்புப் புத்தகம். அனுப்பி வையுங்கள். தங்களை ஒரு நாள் ஜெபத்தோடு சந்திக்க வருவேன். எனக்காக ஜெபியுங்கள்.

காங்கிரஸ் வட்டார செயலாளர்,
வில்போர்டு ராபின்சன்
கன்னியாகுமரி

அன்புள்ள ஐயா,

வணக்கம். தங்கள் புத்தகத்தில் வேதாகம கதா பாத்திரங்கள் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு மிகவும் பயனுள்ளவை. வேதாகம ஆய்வு - கர்த்தரைப் பற்றிய குறிப்புகள் அறியாதவற்றை தெளிவாகக் கூறுகிறது. நன்றி. பின் அட்டையில் உள்ள ஆறுதலான வார்த்தை தைரியம் அளிக்கிறது.

அன்புடன்,
கிரேஸ் மோசஸ்
திருநெல்வேலி

இக்கடிதங்கள் வாசகரின் அன்பு உள்ளங்கள்.
இவர்களுடைய கடிதங்கள்
காலமெல்லாம் எங்களை கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய தூண்டும் எழுத்தாணிகள்.
'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஜீவ வார்த்தைகள்.
நம்மை ஜீவகாலமெல்லாம் வழிநடத்தும் கர்த்தரின் வார்த்தைகள்.
ஒவ்வொரு நாளும் படியுங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் நமது இதழை கொடுத்து
நாம் பெற்ற நன்மைகளை அவர்களும் பெற்றுக்கொள்ள உதவிடுங்கள். நன்றி.

**உங்களுக்காக ஜெபிக்கும் ஆசிரியர்.**

சிறுவர் பகுதி



# சீமோனே, சீமோனே...

## Simon, Simon...

**வேத பகுதி:லூக்கா 22:31,32**

**இ**ந்த[16] வார்த்தையை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பேதுருவைப் பார்த்து சொன்னார். பேதுருவுக்கு மற்றொரு பெயர் சீமோன் என்பது உங்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன்.

சீமோனே, சீமோனே, இதோ கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் (அதாவது பிசாசு) உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன். நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். பள்ளியிலே சிலர் முந்தி முந்தி பேசுகிறவர்களைப் பார்த்து இருப்பீர்கள். இவர்களுக்கு முந்திரிக்கொட்டை என்று பெயர் அதைப்போல பேதுருவும் பன்னிரண்டு சீஷர்களிலே ஒருவராக இருந்தார். ஆகையால்தான் ஆண்டவர் அவரைப்பார்த்து இவ்விதமாக சொன்னார்.

நாமும் சில வேளைகளில் நம்மை நாமே கவனிக்காமல் மற்றவர்களை பார்ப்போம். முதலாவது நம்மை சரிசெய்ய வேண்டும். இல்லையென்றால் பிசாசு கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல நம்மையும் புடைக்க ஆண்டவரிடம் உத்தரவு கேட்டுக்கொள்வான். புடைக்கும்போது நாம் பதரைப் போல விசுவாசம் உடையவர்களாக இருந்தோமானால் பறந்தே போய்விடுவோம். நல்ல கோதுமை மணிகளைப்போல உறுதியான விசுவாசமுடையவர்களாக இருப்போமானால் பிசாசு நம்மைப் புடைக்கும்போது சுளகிலே இருப்போம் அப்படியென்றால் கர்த்தரோடு இருப்போம். ஆகையால் நாம் சரியான பிறகு நம் சகோதரர்களை ஸ்திரப்படுத்த வேண்டும்.

நம்முடைய விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு நமக்காக கர்த்தர் வேண்டுதல் செய்யக்கூடியவராக இருக்கிறார். நம்முடைய விசுவாசத்தை கர்த்தர் அறிந்தவராகவும் இருக்கிறார். அதேபோல பேதுருவின் விசுவாசத்தை அறிந்த ஆண்டவர் உனக்காக வேண்டிக்கொண்டேன் என்றார். ஒருவேளை கர்த்தர் வேண்டிக்கொள்ளாதிருந்தால் பிசாசு புடைக்கும்போது பதரைப்போல பேதுரு பறந்தேபோய்இருப்பார். ஆகையால் நீ குணப்படு என்றார். நாமும் முதலாவது குணப்பட்டு பின்பு மற்றவர்களை குணப்படுத்துவோம். அப்படியென்றால் நாம் சரியானபிறகு மற்றவர்களை சரிசெய்வோம். செய்வீர்களா?

மனப்பாட வசனம்:

**"உங்கள் பொறுமையினால்
உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" (லூக். 21:19).**

## வேத அறிவுப் போட்டி எண்: 271

போட்டியாளர்கள் கவனத்திற்கு,


கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. எவன் திருப்பிப் போடாத அப்பம்?
2. ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது எப்படியிருக்கும் என பவுல் எழுதியிருக்கிறார்?
3. வெட்டுகிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப்புழுக்களும் கர்த்தரின் பெரிய சேனையா?
4. எங்களுக்கு உண்டான சகலஉபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. எவர்கள் அக்கினியினின்று பறிக்கப்பட்ட கொள்ளியைப்போல இருந்தார்கள்?
6. நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை என்ற அப்போஸ்தலன் யார்?
7. இந்த மனுஷனுடைய ஜீவனிமித்தம் எங்களை அழித்துப்போடாதேயும், குற்றமில்லாத இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தாதேயும் என்று கர்த்தரை நோக்கி கூப்பிட்டவர்கள் யார்?
8. நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்தவர் எவர்?
9. ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின்பேரிலும், எண்ணெய்யாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின்பேரிலும் கர்த்தர் பிரியமாயிருப்பாரா?
10. என் சகோதரனும், உடன் வேலையாளும், உடன் சேவகனும், உங்கள் ஸ்தானாபதியும், என் குறைச்சலுக்கு உதவிசெய்தவனுமான என்று யாரைக் குறிப்பிட்டு பவுல் எழுதியிருக்கிறான்?

## வேதாகம ஆய்வு... 55

### சகரியா
### zacharias

1. யோவான் ஸ்நானனின் தகப்பன் – லூக்கா 1:5
2. தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்கள் – லூக்கா 1:6
3. ஆசாரிய ஊழியம் செய்தான் – லூக்.1:6
4. தூதனைக் கண்டு பயந்தான் – லூக்.1:12
5. சகரியாவின் வேண்டுதல் கேட்கப் பட்டது – லூக்.1:13



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
March 2023




## வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் 2023

## Batlagundu Church of Christ 2023

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

பெண்களுக்கான
சிறப்பு புத்தகம்
இன்றே வாங்கி
பயன்பெறுங்கள்




To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



